# ?????????? ???????? ????? ??????????? ??? ???? – ???????? ???????? ????????????





இலங்கை சோஷலிச குடியரசின் 72 ஆவது சுதந்திர தினத்தினை தமிழ் மக்களின் கரி நாள் என பிரகடணப்படுத்தி பிரித்தானியாவில் புலம்பெயர்தமிழர்களால் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் இன்று (செவ்வாய்கிழமை) நண்பகல் ஒன்று திரண்ட பெருமளவிலான புலம்பெயர்கள் தமிழர்கள் இலங்கை அரசிற்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




1956 ஆம் ஆண்டு இனக்கலவரம் முதல் கறுப்பு ஜூலை மற்றும் முள்ளிவாய்க்கால் என இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக தனது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளை தொடர்ந்தும் நடத்தி வருகின்றது. அந்தவகையில் இந்த சுதந்திர தினமானது அந்நாட்டிற்குள் வாழும் எல்லா இனத்தவர்களுக்குமானதல்ல என தெரிவித்து அவர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இம்முறை இடம்பெற்ற சுதந்திர நிகழ்வில் தமிழில் தேசியகீதம் பாடப்படாது என அரசாங்கம் அறிவித்திருந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை ராணுவத்தின் கைகளில் உயிருடன் ஒப்படைக்கப்பட்ட 20,000 இற்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்திற்கும் இதன்போது எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு 70 ஆவது சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியாக இருந்த பிரியங்கா பெர்னாண்டோ ஆர்ப்பாட்டக்காரர்களை பார்த்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


TAMIL SOLIDARITY
Withdraw the occupied troops from all Tamil areas
TAMIL SOLIDARITY
Withdraw the occupied troops from all Tamil areas
GET THE SRI LANKAN ARMY OUT OF MY HOME
TAMIL SOLIDARITY
Close down all secret camps and torture prisons
YOU KILLED


FREE TAMIL EELAM
Release all political prisoners NOW!
To end the exploitation & oppression in Sri Lanka
To end the exploitation & oppression in Sri Lanka
SRI LANKAN GOVERNMENT ADMITS KILL
20000 DISAPPEARED
WE DEMAND




Right to self-determination of Tamil speaking people
Stop all Military/ Defence aid to Sri Lanka
Build a mass movement of the working class, young people & poor
FREE TAMIL EELAM
Withdraw the occupied troops from all Tamil areas
End the repression of political activists & journalists
JUSTICE FOR JOURNALIS
www.tamilsolidarity.org
TAMIL SOLIDARITY
join@tamilsolidarity.org


Let Tamils decide referendum now!
TAMIL SOLIDARITY
End the repression of political activists & journalists
TAMIL SOLIDARITY
Withdraw the occupied troops from all Tamil areas
TAMIL SOLIDARITY
Release all political prisoners NOW!


JUSTICE for the DISAPPEARED
The government admits that all those arrested, surrendered and abducted were murdered.
Reveal the murderers!!
MER UK
NO TO DEATH CERTIFICATES We Need Justice
Movement for equal rights


Withdraw the occupied troops from all Tamil areas

# ?????????????? ????????????????? ??????? ????????? ??????????????????? ?????????!



இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தையொட்டி இன்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறு குற்றங்கள் புரிந்த 07 சிறைக் கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தையிட்டு சிறு குற்றங்கள் புரிந்தோர் மற்றும் குறைந்த காலங்களில் சிறை தண்டனை பெற்றுக் கொண்டோர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இன்று விடுவிக்கும் நிகழ்வு மட்டு சிறைச்சாலையின் அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர தலைமையில் இடம்பெற்றது

இதனடிப்படையில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறு குற்றங்கள் புரிந்த 07 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதில் 2 பேர் பிறிதொரு வழக்கிற்காக மீண்டும் சிறை வைக்கப்பட்டுளனர்.

இதேவேளை நாட்டிலுள்ள 30 சிறைச்சாலைகளில் உள்ள 516 சிறை கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது